சர்வே ரேஞ்சு அலுவலகம் (மதுரை)

* 52 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் அமைக்கப்படவிருக்கும் சர்வே ரேஞ்சு அலுவலகத்துக்குப் பதிலாக ஏற்கெனவே இருக்கிற நம்பர் மூன்று வது சர்வே பார்ட்டி அலுவலகத்தையே மாற்றி அமைக்கக் கோரி இராமநாதபுரம் நகராட்சி மன்றத்திலிருந்து தீர்மானம் வந்ததா ?

(இ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) No, Sir.

(இ) Does not arise.

குந்தா மின்சாரத் திட்டம்

* 53 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குந்தா மின்சாரத் திட்டத்தின் மூலம் தற்போது கிடைக்கும் மின்சக்தி எவ்வளவு ?

(இ) அது எந்தப் பிரதேசங்களுக்குப் பயன்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 180,000 K Ws. from Kundah I and II stages.

(b) The power is fed into the Madras Grid and thereby benefits the entire State.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது தண்ணீர் நிலை குறைந்த காரணத்தினால் மின்சார உற்பத்தியும் குறைவாக இருக்கிறதென்று செய்தி வந்திருக்கிறது. குந்தா சம்பந்தப்பட்ட வரை எந்த நிலையில் இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : குந்தா சம்பந்தப்பட்டவரை மழை இல்லாவிட்டால் இன்னும் மூன்று நாட்களுக்குத்தான் தண்ணீர் இருக்கும்.

ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸர் (தேவகோட்டை)

* 54 கேள்வி.—திரு. சா. கணேசன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் எத்தனை வருட காலம் ஒரு டிவிஷனிலேயே வேலை பார்க்கலாம் ?

(இ) தற்போதுள்ள தேவகோட்டை டிவிஷனல் ஆபீசர் அந்த டிவிஷன் பொறுப்பை ஏற்று எத்தனை வருட காலமாக அங்கேயே பணியாற்றி வருகிறார் ? காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Generally no Deputy Collector is retained in the same Divisional charge for a period of more than three years, save for exceptional reasons.